சுருக்கம்

அறிவிப்புகள் – மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி) அவர்களால் 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மற்றும் 2023–2024–ம் ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளில் இணையவழி சேவைகள் வழங்குவது – மின் ஆளுமை நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.2) துறை

அரசாணை (நிலை) எண்.50

நாள்: 08.03.2024.
சோபகிருது, மாசி 25
திருவள்ளுவர் ஆண்டு 2055.

படிக்கப்பட்டவை:

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி) அவர்களால் 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிவிப்பு.
2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2023–24–ம் ஆண்டில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித எண்.23185/2022/ப.ரா.3.1, நாள் 31.05.2023 மற்றும் 24.07.2023.

*****

ஆணை:

மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி) அவர்கள் 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டுகளுக்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கான மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்:–

அறிவிப்புகள் 2021–22

1. ஊராட்சி நிர்வாகத்தில் உள்ள கணக்குகள், பதிவேடுகள் மற்றும் படிவங்கள் எளிமைப்படுத்தப்பட்டு முறைப்படுத்தப்படும்

அறிவிப்புகள் 2022–23

7.ஊராட்சிகளின் அனைத்துச் சேவைகளும் இணையதளம் மூலம் வழங்கப்படும்.

ஊரக பகுதிகளில், பொதுமக்கள் மனைப்பிரிவுகளுக்கான அனுமதி, கட்டட அனுமதி, தொழிற்சாலைகள் தொடங்க மற்றும் தொழில் நடத்த தேவையான அனுமதிகளை எளிதில் பெற (Ease of Doing Business), ஒற்றைச் சாளர முறையில் இணையதளம் மூலம் வழங்கப்படும்.

**8.கிராம ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி மற்றும் கட்டணங்கள் இணையவழி மூலம் செலுத்தும் வசதி உருவாக்கப்படும்.**

கிராம ஊராட்சிகளுக்கு பொதுமக்கள் செலுத்த வேண்டிய வீட்டுவரி, தொழில்வரி, குடிநீர்க் கட்டணம், விளம்பர வரி, உரிமக் கட்டணம் போன்றவற்றை தற்போது ஊராட்சி அலுவலகங்களுக்கு நேரில் சென்றோ, ஊராட்சி செயலர் மூலமோ செலுத்த வேண்டியுள்ளது. இச்சேவைகள் அனைத்தும் இணைய வழியில் பெறும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**9.கிராம ஊராட்சியின் மின் நுகர்வு மற்றும் குடிநீர்க் கட்டணம் இணையவழி மூலம் செலுத்தும் முறை உருவாக்கப்படும்.**

கிராம ஊராட்சிகள், தங்களது மின் மற்றும் குடிநீர்ப் பயன்பாட்டுக் கட்டணத்தை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உடனுக்குடன் இணைய வழியில் செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்படும்.

**அறிவிப்புகள் 2023-24**

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற நிதி நிலை அறிக்கையின் போது கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:

**வீட்டு வரி, தொழில் வரி, குடிநீர் வரியை ஊராட்சிகளுக்கு இணைய வழியில் எளிதில் செலுத்துவதற்கு ஒரு வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.** விரைவில் கட்டட வரைபடம், மனை வரைபட அனுமதிகளையும் இணைய வழியில் பெற வழி வகை செய்யப்படும்.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேற்காணும் அறிவிப்புகளைச் செயல்படுத்திடும் வகையில் கீழ்க்காணும் மின் ஆளுமை நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணை வெளியிடுமாறு அரசை கோரியுள்ளார்: –

1) கிராம ஊராட்சிகளில் வீட்டு வரி / சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, தொழில் உரிமக் கட்டணம் மற்றும் இதர வரியில்லா வருவாய் இனங்களை இணைய வழியில் செலுத்துதல்.
2) இணைய வழியில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல்.

3) இணைய வழியில் கட்டட அனுமதி வழங்குதல்.
4) இணைய வழியில் தொழிற்சாலைகளுக்கான கட்டட அனுமதி மற்றும் உரிமம் வழங்குதல்.
5) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணத்தை இணைய வழியில் செலுத்துதல்.
6) ஊராட்சிகளில் பயன்படுத்தப்படும் பதிவேடுகள் மற்றும் படிவங்களை கணினி மூலம் பராமரித்தல்.

3. மேற்கூறிய மின் ஆளுமைகள் குறித்த பயிற்சி தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் ஊராட்சி பிரதிநிதிகளுக்கு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மூலமாக வழங்கப்படும். அதற்குரிய நிதியினை மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தில் (RRGSA) இருந்து பயன்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேலும் மின் ஆளுமை பணிகளை மேற்கொள்ள மாநில அளவில் / மாவட்ட அளவில் / வட்டார அளவில் திட்ட செயல்பாட்டு அலகுகள் (Programme Management Units) ஏற்படுத்திடவும் இதற்கான மனித வளத்தை தேசிய தகவலியல் மையம் (NIC), தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) போன்றவற்றின் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் மூலம் Out Sourcing முறையில் பெற்று செயல்படுத்தவும் இதற்கான செலவினத்தை மாநில அளவிலான ஒற்றை மைய கணக்கில் (TNPASS) சேகரமாகும் வட்டித் தொகையில் இருந்தும் பற்றாக்குறை ஏற்படின் 15-வது மத்திய நிதி ஆணையத்தின் அனுமதிக்கப்பட்ட வரையறுக்கப்படாத நிதியில் 10% நிர்வாக செலவின ஒதுக்கீட்டில் இருந்தும் பயன்படுத்திட ஆவன செய்யுமாறும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்தபின், கீழ்க்காணும் மின் ஆளுமை நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு ஆணையிடுகிறது:-

1) கிராம ஊராட்சிகளில் வீட்டு வரி / சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, தொழில் உரிமக் கட்டணம் மற்றும் இதர வரியில்லா வருவாய் இனங்களை இணைய வழியில் செலுத்துதல்.
2) இணைய வழியில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல்.
3) இணைய வழியில் கட்டட அனுமதி வழங்குதல்.

4) இணைய வழியில் தொழிற்சாலைகளுக்கான கட்டட அனுமதி மற்றும் உரிமம் வழங்குதல்.

5) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணத்தை இணைய வழியில் செலுத்துதல்.

6) ஊராட்சிகளில் பயன்படுத்தப்படும் பதிவேடுகள் மற்றும் படிவங்களை கணினி மூலம் பராமரித்தல்.

7) மேற்கூறிய மின் ஆளுமைகள் குறித்த பயிற்சி தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் ஊராட்சி பிரதிநிதிகளுக்கு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மூலமாக வழங்கப்படும். இதற்கான செலவினத்தை மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்திலிருந்து (RRGSA) பயன்படுத்திட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

8) மேற்காணும் மின் ஆளுமை பணிகள் குறித்த கூடுதல் அறிவுரைகள் வழங்கிட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி
முகமைகள் (சென்னை நீங்கலாக).

**நகல்**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு அமைச்சர்
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர்,
சென்னை–9.
நிதித் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ப. தி. [signature]
பிரிவு அலுவலர்